


**11. 07. 2026**

தலைப்புச் செய்திகள்

1. இந்தியா - நியூசிலாந்து இடையே 35 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான வர்த்தக சேவைக்கு இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

2. தேச கட்டமைப்பில் நூலகங்கள் ஆற்றல்மிகு கருவிகளாக திகழ்கின்றன என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா கூறியுள்ளார்.

3. சுதந்திர போராட்ட வீரர் அழகு முத்துக்கோனின் வீரமும், தியாகமும், தமிழனத்தின் பெருமையாக விளங்குவதாக முதலமைச்சர் திரு. விஜய் தெரிவித்துள்ளார்.

4. உலக மக்கள் தொகை தினத்தை ஒட்டி பல்வேறு மாவட்டங்களில் இன்று விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

5. இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 5-வது இறுதி 20-20 கிரிக்கெட் போட்டி போட்டி சௌத் ஆம்டனில் இன்று இரவு 7 மணிக்கு நடைபெறுகிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

நியூசிலாந்து நாட்டிற்கு தாம் மேற்கொண்டுள்ள பயணம் வெற்றிகரமாக அமைந்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

ஆக்லாந்தில் இந்திய வம்சாவளியினரிடையே இன்று உரையாற்றிய அவர், இந்த வெற்றிக்கு காரணமாக அங்கு வாழும் இந்திய வம்சாவளியினரை பிரதமர் சுட்டிக்காட்டினார்.

முன்னதாக அந்நாட்டு பிரதமர் கிறிஸ்டோபர் லக்சனுடன் ஆக்லாந்தில் நடைபெற்ற இருதரப்பு பேச்சுவார்த்தைகளுக்கு பின்னர் இருவரும் வெளியிட்ட கூட்டறிக்கையில், இந்தியா நியூசிலாந்து இடையே அடுத்த ஐந்து ஆண்டுகளில் 35 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் வர்த்தக சேவைக்கு இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளதாக குறிப்பிட்டனர்.

இந்தோ பசிபிக் பிராந்தியத்தில் வெளிப்படையான சுதந்திரமான வளர்ச்சிக்கு இருநாடுகளும் உறுதிப் பூண்டுள்ளதாக தெரிவித்தனர்.

சர்வதேச விதிகளுக்கு உட்பட்டு இறையாண்மையும், எல்லைப்பகுதி உரிமையும் நிலைநாட்டப்பட வேண்டியதன் அவசியத்தையும் இரு தலைவர்களும் எடுத்துரைத்தனர்.

இந்தியாவையும், நியூசிலாந்தையும் இணைக்கும் பாலமாக விளையாட்டுத்துறை திகழ்வதாகவும், இந்த ஆண்டு எழுச்சி மிகு விளையாட்டுத்துறை ஒத்துழைப்பு இருநாடுகளுக்கு இடையே தொடங்கியுள்ளதாகவும் பிரதமர் தமது சமூக வலைதளப்பதிவில் மகிழ்ச்சி தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

ராஜ்நாத் சிங்

நாட்டின் மரபு சார்ந்த இராணுவத் திறன்களையும் அதிநவீன தொழில்நுட்பங்களையும் வலுப்படுத்தி வலுவான சுயசார்பு பாரதத்தை இந்தியா கட்டமைத்து வருவதாக பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

விசாகப்பட்டினத்தில் உள்நாட்டில் வடிவமைக்கப்பட்ட I.N.S. மகேந்திரகிரி அதிநவீன போர்க்கப்பலை கிழக்கு கடற்படையுடன் இணைக்கும் நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர், எதிர்காலத்தில் செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட அதிநவீன தொழில்நுட்பங்கள் ராணுவப் பயன்பாட்டில் முக்கியத்துவம் பெறும் என்பதை எடுத்துரைத்தார்.

இந்திய கடற்படையில் 6 அதிநவீன போர்க்கப்பல்கள் கடந்த ஒன்றரை ஆண்டுகளில் இணைக்கப்பட்டது விரிவடைந்து வரும் நம் தேசத்தின் கப்பல் கட்டமைப்பு திறனிற்கும், பாதுகாப்பு தொழிற்சூழலுக்கும் சான்றாக திகழ்கிறது என்று கூறினார்.

இதனால் உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கும் என்று நம்பிக்கை தெரிவித்த அவர், இயற்கை பேரிடர் காலங்களில் இந்திய கடற்படையின் மனிதநேய செயல்பாடுகள், மீட்பு நடவடிக்கைகள் உள்ளிட்ட அளப்பறிய சேவைகளையும் சுட்டிகாட்டினார்.

அண்மை மேற்காசிய நெருக்கடியின் போது வணிக கப்பல்களின் பாதுகாப்பான போக்குவரத்தில் இந்திய

கடற்படையின் சிறப்பான பங்கை திரு. ராஜ்நாத் சிங் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

அமித்ஷா

தேச கட்டமைப்பில் நூலகங்கள் ஆற்றல்மிகு கருவிகளாக திகழ்வதுடன், கலாச்சாரத்தையும், அறிவுசார் திறனையும், நவீன கல்வியையும், மக்களிடையே கொண்டு செல்வதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா கூறியுள்ளார்.

புதுதில்லியில் பொது நூலக திறப்பு விழாவில் இன்று உரையாற்றிய அமைச்சர், இளையோர், நூலகங்களுடன் இணைந்திருப்பதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

நாட்டையும், நாட்டு மக்களையும் புரிந்து கொள்ள வாசிப்பு பழக்கம் மிக இன்றியமையாதது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அறிவுத் திறனின் ஆதாரமாக நூலகங்கள் விளங்குவதாக கூறிய அவர், நூலகங்களை பள்ளிகளோடு இணைக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகக் கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖

நிதின் கட்கரி

வலுவான, நிலையான, போக்குவரத்து ஒருங்கிணைப்பை உருவாக்க அதிநவீன தொழில் நுட்பங்களையும், புதுமையான நிலைப்பாடுகளையும், பிரிக்ஸ் நாடுகள் பகிர்ந்து கொள்வதாக மத்திய சாலை போக்குவரத்து

நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார்.

நாக்பூரில் பிரிக்ஸ் போக்குவரத்து அமைச்சர்கள் கூட்டத்திற்கு பின்னர் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இருசார்ந்த ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான ஒப்பந்தம் ஒன்று மேற்கொள்ளப் பட்டதாகவும் குறிப்பிட்டார்.

மீள்தன்மை, புத்தாக்கம், ஒத்துழைப்பு, நீடித்த நிலைத்தன்மை என்ற கருப்பொருளுடன் நடைபெறும் இந்த 2 நாள் மாநாட்டில், பிரேசில், சீனா, எகிப்து, இந்தோனேஷியா, ஈரான், ரஷ்யா, சவுதிஅரேபியா, எத்தியோப்பியா, தென்னாப்பிரிக்கா, ஐக்கிய அரபு அமீரகங்களின் போக்குவரத்து துறை அமைச்சர்கள் பங்கேற்றுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖❖

அழகு முத்துக்கோன்

சுதந்திர போராட்ட வீரர் அழகு முத்துக்கோனின் 316-வது பிறந்த நாளை ஒட்டி முதலமைச்சர் திரு. விஜய் வெளியிட்ட செய்தியில் சுதந்திரத்தை நிலைநாட்ட போராடிய அன்னாரது வீரமும், தியாகமும், தமிழனத்தின் பெருமையாக விளங்குவதாக கூறியுள்ளார்.

இந்நாளையொட்டி தூத்துக்குடி மாவட்டம் காட்டாளங்குளத்தில் அமைந்துள்ள அன்னாரது மணி மண்டபத்தில் உள்ள அவரது திருவுருவச்சிலைக்கு அமைச்சர்கள் திரு. மதன்ராஜா திரு. ஸ்ரீநாத் உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

1710-ம் ஆண்டு பிறந்த மாவீரன் அழகு முத்துக்கோன் ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு எதிராக துணிச்சலாக குரல் எழுப்பியதுடன், சுதந்திரத்திற்காக உயிர்த்தியாகம் செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖❖❖❖

மக்கள் தொகை தினம்

உலக மக்கள் தொகை தினம் இன்று கடைப்பிடிக்கப்படுகிறது.

"இளையோர்களின் ஆளுமையை மேம்படுத்தி நியாயமான, நம்பிக்கைக்குரிய உலகில் அவர்கள் விரும்பும் குடும்பங்களை உருவாக்குவது" என்பதை கருப்பொருளாக கொண்டு இந்த ஆண்டு இத்தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

மக்கள் தொகை அதிகரிப்பால் ஏற்படும் வறுமை, வேலை வாய்ப்பின்மை, தாய்மார்கள் நலன் குன்றுதல் உள்ளிட்ட எதிர்மறையான விஷயங்களை கட்டுப்படுத்துவதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

மக்கள் தொகை தினம் குடும்ப திட்டமிடலின் அவசியத்தை எடுத்துரைப்பதாக மத்திய சுகாதார குடும்ப நலத்துறை அமைச்சர் திரு. ஜே.பி. நட்டா கூறியுள்ளார்.

வளமான இந்தியாவை உருவாக்கும் வகையில் சுகாதாரமான, ஆளுமை மிக்க, வலுவான ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் விழிப்புணர்வு பேரணிகள் நடைபெறுகின்றன.

விருதுநகர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் செவிலியர் பயிற்சி பள்ளி மாணாக்கர் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சுகபுத்ரா இன்று தொடங்கி வைத்தார்.

வேலூர் மாவட்டத்தில் நூற்றுக்கணக்கான பள்ளி மாணாக்கர் மக்கள் தொகை பெருக்கத்தின் விளைவுகள் குறித்த விழிப்புணர்வு பதாகைகளுடன் ஊர்வலமாக சென்றனர்.

சிறிய குடும்பம் ! சீரான வாழ்வு ! என்ற கருத்தை பொதுமக்களிடையே வலியுறுத்தும் உறுதிமொழியும் ஏற்கப்பட்டது.

திருவண்ணாமலையில் விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. வந்தனா கார்க் கொடியசைத்து வைத்ததோடு, மக்கள் தொகை தின உறுதிமொழியும் செய்து வைத்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖

வெங்கடரமணன்

தேனி மாவட்ட நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்கில் மாநில உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.வெங்கடரமணன் இன்று நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் நியாயவிலைக் கடைகளுக்கு வழங்கப்படும் அரிசி, கோதுமை, சர்க்கரை

உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் கையிருப்பு மற்றும் தரம் உள்ளிட்டவை குறித்து அமைச்சர் கேட்டறிந்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

மாணிக்கம் தாகூர்

தமிழக விவசாயிகளின் பாதுகாப்பு குறித்து அனைத்து கட்சியினரும் ஒருசேர விவாதிக்க வேண்டியதன் அவசியத்தை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. மாணிக்கம் தாகூர் வலியுறுத்தி உள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், காவிரி நீர் பிரச்சனையில், கர்நாடகத்தில் அனைத்து அரசியல்வாதிகளும் ஒற்றுமையுடன் இருப்பது போல, தமிழக அரசியல்வாதிகளும் ஒற்றுமையுடன் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் நிலையிலிருந்து மாறக்கூடாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

நயினார் நாகேந்திரன்

தமிழகத்தில் வாரிசு அடிப்படையில் காத்திருப்பவர்களுக்கு பணி வழங்க அரசு முன்னுரிமை அளிக்க வேண்டுமென பி.ஜே.பி. மாநிலத்தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசியஅவர், கரூரில் இந்துசமய அறநிலையத் துறைக்கு

சொந்தமான 3 ஆயிரத்து 55 ஏக்கர் நிலத்தை தனியாருக்கும் வழங்கும் அரசின் முடிவு கண்டிக்கத்தக்கது என்றார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

வீரபாண்டியன்

அரசியல் விருப்பு, வெறுப்பிற்கு அப்பாற்பட்டு கடந்த ஆட்சிக்காலத்தில் செயல்படுத்தப்பட்ட மக்கள் நலத்திட்டங்களை தற்போதைய அரசு தொடர வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் திரு. வீரபாண்டியன் கேட்டுக் கொண்டுள்ளார்.

தர்மபுரியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் சிவகாசி பட்டாசு தொழிற்சாலை, ஆம்பூர் தோல் தொழிற்சாலை, கட்டணமில்லா கல்வி, கைத்தறி நெசவுத் தொழில் உள்ளிட்ட ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரத்தை தமது கட்சி வலியுறுத்தும் என்றார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

தென்காசி

தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் சீசன் தொடங்கி உள்ளதால் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

காஞ்சிபுரம்

காஞ்சிபுரத்தில் இந்திய தொழில் கூட்டமைப்பின் சார்பில் மாதிரி நாடாளுமன்ற நிகழ்வு இன்று தொடங்கியது.

2 நாட்கள் நடைபெறும் இந்நிகழ்ச்சியின் மூலம் ஜனநாயகத்தில் நாடாளுமன்ற நடைமுறைகள் குறித்து விரிவாக தெரிந்து கொண்டதாக இதில் பங்கேற்ற மாணவிகள் தெரிவித்துள்ளனர்.

... வாய்ஸ் ...

❖❖❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 5-வது இறுதி 20-20 கிரிக்கெட் போட்டி போட்டி செளத் ஆம்டனில் இன்று இரவு 7 மணிக்கு நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

கால்பந்து

FIFA உலககோப்பை கால்பந்து போட்டியின் காலிறுதி ஆட்டங்களில் நாளை அதிகாலை இரண்டரை மணிக்கு நார்வே – இங்கிலாந்தையும்,

காலை ஆறரை மணிக்கு நடப்பு சாம்பியன் அர்ஜென்டினா – சுவிட்சர்லாந்தையும் எதிர்கொள்கின்றன.

ஏற்கனவே ஸ்பெயினும், பிரான்ஸும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளன.

❖❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖❖